JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 844/2023 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | மோசஸ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது முத்துமாலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் மகளை இரண்டாவது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தோம். தற்போது அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டது. 1 வது எதிரி 2 வது எதிரியின் அப்பா, 3 வது எதிரி 2 வது எதிரியின் அம்மா, 4 வது எதிரி 2 வது எதிரியின் சகோதரர். அசா.1 பிருஸ்ஸில்லா என் மனைவி. நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரிளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு</u>

அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 15.11.2022 ம் தேதியன்று 12.10 மணியளவில் ஆஜர் எதிரிகள் என்னையும் அசா.1 ஐயும் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல, என்னையும் அசா.1 யும் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதை தடுக்க வந்த சாட்சி கிருபாலிட்டில் பிளவர், எனக்கும் அசா.1 க்கும் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம் என்றால் சரியல்ல, எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அசா.1 காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 844/2023 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | பிரிஸ்ஸில்லா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது முத்துமாலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவிங் ஸ்கூல் வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் மகளை இரண்டாவது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தோம். தற்போது அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டது. 1 வது எதிரி 2 வது எதிரியின் அப்பா, 3 வது எதிரி 2 வது எதிரியின் அம்மா, 4 வது எதிரி 2 வது எதிரியின் சகோதரர். நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரிளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த

விரும்பவில்லை. புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 15.11.2022 ம் தேதியன்று 12.10 மணியளவில் ஆஜர் எதிரிகள் என்னையும் சாட்சி மோசஸையும் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல, என்னையும் சாட்சி மோசஸையும் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதை தடுக்க வந்த சாட்சி கிருபாலிட்டில் பிளவர், எனக்கும் சாட்சி மோசஸிற்கும் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல, எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi